நாள் -06.02.2026

**C.C. No.**89 /2018

**ம.சா. 2. கார்த்திகேயன் த/பெ.சண்முகசுந்தரம்.**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 06$^{th}$ **day of February** 2026.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் டிப்ளமோ வரை படித்துள்ளேன். நான் டாஸ்மாக்கில் விற்பனையாளராக வேலை பார்த்து வருகிறேன். 2016 ம் ஆண்டு என்னுடைய மாத வருமானம் ரூ.10 ஆயிரம் ஆகும். நான் 2016-17 ஆண்டிற்கான வருமான வரி செலுத்தியுள்ளேன். என்னுடைய வருமானவரி கணக்கு எண் எனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை. வருமான வரி செலுத்திய கணக்குபட்டியலில் வழக்கு சம்பந்தமாக செலுத்திய தொகை குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் அன்றைய தினம் பணம் வைத்ததற்கான ஆவணங்கள் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. இவ்வழக்கின் புகார்தாரரும் செந்தில்குமாரும் டாஸ்மாக்கில் விற்பனையாளராக தான் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் எதிரி எந்த தேதியில் பணம் கேட்டார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் நான் எவ்வளவு தொகை கொடுத்து என்ன குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இருவரும் சேர்ந்து 14 லட்சத்து 50 ஆயிரம் கொடுத்ததாக சொல்லி உள்ளேன்.

3. நான் எதிரியிடம் பணம் கேட்டேன் என காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை எனன்றால் சரியல்ல, வாய்மொழியாக கேட்டேன். நான் செந்தில்குமாரிடம் பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளதற்கு அவர் ஏதேனும் ஆவணம் கொடுத்தாரோ அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை. நான் செந்தில்குமாரிடம் கொடுத்த பணத்தை திரும்ப கேட்டேன் என காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வாய்மொழியாக எந்த தேதியில் கேட்டேன் என முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. EX.A1 ஆவணத்திலும் நான் தனிப்பட்ட முறையில் எவ்வளவு தொகை கொடுத்துள்ளேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இருவரும் சேர்ந்து கொடுத்தாக சொல்லியுள்ளேன். எனக்கு KVP BANK, UNIONBANK, SBI BANK ஆகிய வங்கிகளில் கணக்கு உள்ளது. என்னுடைய முதல் விசாரணையில் பத்தி 2 ல் மேலே

சொன்னவாறு தான் எழுதி கொடுத்த கடன் பத்திரத்தின்படி எதிரி நடந்து கொள்ளாததால் நானும் எனது நண்பர் செந்தில்குமாரும் முடிவு செய்து மேற்படி காசோலையை செந்தில்குமாரின் வங்கி கணக்கில் தாக்கல் செய்வது என முடிவு செய்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

5. அப்பொழுது வரை யாருடைய பெயரில் காசோலை கொடுக்கப்பட்டது என முடிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிரி என்ன வகையான காசோலை எங்களுக்கு அளித்தார் என்றால் PROP காசோலையை அளித்தார். என்னிடம் காட்டப்படும் காசோலையில் பாட்னர்ஸ் அளித்தாக உள்ளது என்றால் சரிதான். சாட்சி காசோலையை பார்வையிட்டு பாட்னர் என்பதற்கு பதிலாக தான் ப்ரப்பரேட்டர் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சொன்னவாறு சொன்ன விதத்தில் பணம் கொடுத்திருந்தால் செந்தில்குமார் மற்றும் எதிரிக்கு பணத்தை கேட்டு அறிவிப்போ அல்லது நடவடிக்கையோ எடுத்திருப்பேன் என்றும், நான் சொன்னது போல் கொடுக்காதால் தான் இருவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. செந்தில்குமார் கேட்டுகொண்டதற்கிணங்க அவருககு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. நானும் செந்தில்குமாரும் சேர்ந்து எதிரி மீது அசல் வழக்கு OS NO.1371/2016 PDM Coimbatore வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எதிரி என் மீதும் செந்தில்குமார் மீதும் கோவை மாநகர காவல் ஆணையாளர் அவர்களிடம் புகார் அளித்திருந்தார் என்றால் சரிதான். அப்புகாரில் நான் 6 காசோலைகள், வெற்று தாள்கள் ஆகியவற்றில் கையொப்பம் மட்டும் பெற்று மிரட்டி புகார் அளித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த அசல் வழக்கில் para no.6 ல் 2 ம் பிரதிவாதியான பழனிசாமிக்கு ரூ.6 லட்சம் முன்தொகையாக கொடுக்கப்பட்டதாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான்.

7. எதிரி எங்கள் மீது கோவை மாநகர காவல் ஆணையாளர் அவர்களிடம் புகார் அளித்த பின்பு தான் நான் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் எதிரி மீது போடப்பட்ட பொய்யான வழக்கை நடத்தாமல் நீதிமன்றம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அது சம்பந்தமாக எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ள விபரம் வாதி என்ற முறையில் எனக்கு தொயும் என்றும் இவ்வழக்கிற்கு பாதிப்படையும் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரிக்கு எந்த தொகையும்

தரவில்லை. அவ்வாறு தருவதற்கு எனக்கு எந்த பொருளாதார வசதியும் கிடையாது என்றால் சரியல்ல.

8. நான் எதிரியை காரில் கடத்தி போலியாக பெறப்பட்ட காசோலையை பயன்படுத்தி செந்தில்குமார் தாக்கல் செய்த் பொய்யான வழக்கிற்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் எந்த விதமான சட்டபடியான கடன் கிடையாது என்றால் சரியல்ல. பொதுஅதிகார ஆவணம் பற்றி ய விபரங்கள் புகார் மற்றும் வழக்கு அறிவிப்பில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அது சம்பந்தமாக எனக்கு ஞாபகம் இல்லை. பொது அதிகார ஆவணம் காலவரை சட்டத்தின் அடிப்படையில் பாதிப்பிற்குள்ளானது என்றும் மேற்சொன்ன ஆவணம் ஜோடிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. எதிரி இவ்வழக்கிலிருந்து தப்பிக்க கூடாது என்பறகாக பொது அதிகார ஆவணம் ஜோடித்து செந்தில்குமார் அவர்களுக்கு உடந்தையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.06 19:25:33 +0530

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்**